பொள்ளாச்சி வாசி

ஆசிரியர் P. S. வேலுசாமி வியாழன் வெளியீடு.

போர் 1. | பொள்ளாச்சி, 22—2—51 விலை அரையணா | வெற்றி 2

விவசாயிகள் மகாநாடு.

11—2—51 ல் கிணத்துக்கடவில் பொள் ...ச்சித் தாலூக்கா 4-வது விவசாயிகள் மகா ... ஸ்ரீ உடையப்பா, தலைமையில் நடை ...ற்றது. ஸ்ரீ வி. சி. பழனிசாமிக் கவுண் ...டர் தேசியக் கொடி யேற்றுவித்தார். ஸ்ரீ ...வி. கே. பழனிசாமி கவுண்டர் அனைவருக் ...கும் நல்வரவு கூறி வரவேற்ருர். ஸ்ரீ. எஸ். ... பழனிசாமி ஆண்டறிக்கையை வாசித் ...தார். மந்திரி ஸ்ரீ எம். பக்தவத்சலம் அவர் ... மகாநாட்டைதிறந்து வைத்துப் பேசினர். ...நாட்டில் பல முக்கிய தீர்மானங்கள் ...நிறவேற்றப்பட்டன.

கவுன்சிலர்களே! கவனியுங்கள்.

...முனிசிபல் மின்சார இலாகாவை சர்க் ...ரே எடுத்து நடத்தப் போகிருர்களாம். ...மின்சார இலாகாவின் நிர்வாகம் சர்க்காரின் ...மேற்பார்வையில் போனல், அலுவல்கள்(வீடு ...களுக்கும், தெருக்களுக்கும் லைட் போடுவது ...போன்றவைகள்) ஆமை வேகத்தில் நடை ...பெறுமோ, அல்லது முயல் வேகத்தில் இரு ...க்குமோ, இப்போது திட்டமாகச் சொல்வதற் ...கில்லை.

...எப்படி இருப்பினும் சரி. இப்பொழுதே, ...இருந்த வார்டு கவுன்சிலர்கள் தங்கள் வார் ...டில் எந்தெந்த இடத்தில் எத்தனை விளக் ...குகள் போட வேண்டுமென்பதை கவனித்து ...கவுன்சிலில் தீர்மானம் நிறைவேற்றி, லைட்டு ...கள் போடச் செய்தால், நலமாயிருக்கும். கவ ...னியுங்கள்.

வாழ்த்தும், வரவேற்பும்.

Vijayaraghavan, B. A. B. L.
...dvocate & Burmah shell Agent,
Pollachi. 12—2—51.

...பி. எஸ். வேலுசாமி,
...சிரியர், "பொள்ளாச்சி வாசி."

...ஐயா, தங்கள் அழைப்புத்தாள் கிடை...த்தது. ஊரில் இல்லாததின் நிமித்தம் வர இயலாததற்கு மன்னிக்கவும். இத்துடன் அனுப்பியிருக்கும் சந்தாத்தொகையைப் பெற்றுக்கொண்டு என்னை ஒரு சந்தாதாராக ஏற்றுக்கொள்ளவும். தங்கள் வாசி, மென்மேலும் ஓங்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டிக்கொள்ளுகிறேன்.

தங்கள் அன்புள்ள நண்பன்,
S. விஜயராகவன்.

அன்புள்ள வேலுசாமி,

எனது ஆசி! பத்திரிக்கை ஒரு சிறந்த பத்திரிக்கையாய் விளங்க முருகன் அருள் புரிவாராக!

சி. ஆர். சுப்ரமண்ய சாஸ்திரி.

அன்புள்ள நண்பர் வேலுசாமி,

தங்களால் ஆரம்பமாகும் வாரப்பத்திரிக்கையான, "பொள்ளாச்சி வாசி" சிறந்த சேவையில் நிறைந்து நின்று பணியாற்ற எல்லாம் வல்ல ஆண்டவன் அருள் வேண்டிவணங்குகிறேன். நமஸ்காரம்,

அன்புள்ள,
எல். குன்னையா,
உபகாரியதரிசி, கோ. ஜி. கா. கமிட்டி.

ஆரம்ப விழா!

11—2—51 ல் நாராயண டாக்கீஸில் ... கார்த்திகேயா மில்ஸ் ஸ்ரீ கே. முத்து... சாமி கவுண்டர் தலைமையில் "பொள்ளா...ச்சி வாசி" ஆரம்பவிழா நடைபெற்ற... முனிசிபல் சேர்மன் ஸ்ரீ சேதுராமசாமி வ...திருந்த அனைவருக்கும் நல்வரவு கூறி ப...திரிக்கையின் நோக்கத்தை விளக்கி... கூறினர். கனம் மந்திரி எம். பக்தவத்சல... அவர்களை ஆரம்ப விழா செய்யும்படி த...வர் ஸ்ரீ கே. முத்துசாமிக்கவுண்டர் கே...டுக் கொண்டார்.

மந்திரி அவர்கள் ஆரம்ப விழா செய்... பேசுகையில், பத்திரிக்கைகளின் கட... வளர்ச்சி, சில தவருன பாஷையில் எழு... வருவது, முதலியவற்றை விளக்கிக் கூ... விட்டு, காங்கிரஸ் ஊழியர் ஸ்ரீ வேலுச... ஆரம்பித்துள்ள "பொள்ளாச்சி வா... சிறந்த சேவை செய்யும் எனத்தாம் ந... வதாகவும் கூறி, சில பிரதிகளை மந்திரி... வினியோகம் செய்தார். ஆசிரியர் வாழ்... துச் செய்திகளை வாசித்து விட்டு அனை...ருக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டா... விழா இனிது முடிவுற்றது.

ஊர் வம்பு.

நகரிலுள்ள ரேஷன் ஷாப்புகள் சிலவற்றில் வாங்கிப்போகும் அரிசி, சர்க்கரை முதலியவற்றை வீட்டுக்குகொண்டுபோய் அளந்து பார்த்தால் குறைவதாகப் புகார் வருகிறது, ஒரு தடவை வாங்கி திருப்பி அளந்தால் ஓரளவு குறையும் என்பதை நாம் ஒப்புக் கொள்ளுகிறோம். ஆனல் குறைவது அதிகமாக இருக்கிறது, என்கின்றனர். இது சம்மந்தமாக ஏற்கெனவேயே சிலர் டவுன் காங்கிரஸ் கமிட்டிக்கும் ரேஷன் ஆபீஸருக்கும் புகார் செய்துள்ளனர். புகார் எப்படி இருப்பினு... சகஜமாக அரிசியும், சர்க்கரையும் குறை...வாகத்தான் இருப்பதாகத் தெரிகிறது... இதை அதிகாரிகளே கண்காணித்து வ...வதென்பது நடைமுறையில் அசாத்திய...

வாங்குபவர்கள் கவனிக்க வேண்டு... பெரும்பாலும் பெண்மணிகளே வா...வதால் அதுவும் முடியாது ஆகவே, ...யாக அளந்து போடுவது தான் நியாய... தவறு செய்யக்கூடாது என்ற எண்ண... ரேஷன் ஷாப்புக்காரர்களுக்கே ஏற்ப...டால் நலமாயிருக்கும். அதிகாரத்தா... சாதிப்பதை விட மனமாற்றத்தால் சா...கலாம். கவனிப்பார்களாக.

செல்வாக்கு மிகுந்த தமிழ்
வாரப்பத்திரிக்கை.

பொள்ளாச்சி வாசி

பொள்ளாச்சி 22—2—51. வியாழன்.

கிராம ரேஷன்.

நம் பொள்ளாச்சித் தாலூக்காவிலும்
கிராம ரேஷன் எடுபட்டு விட்டது. ஒரு
லர் செய்த பெரும் கிளர்ச்சியின் பயனாய்
ர்க்கார் கிராம ரேஷனை ரத்து செய்தது.
ன்பு ஒரு வண்டி நெல் சுமார் 120—ரூ.
இருந்தது. இப்போது 320—ரூபாய்க்கு
மல் விலை இருக்கிறது. மழை தவறிவிட்
தால், சோளம், ராகி, போன்ற தானிய
ள் அறவே கிராமங்களில் இல்லை. ரூபா
க்கு ஒன்றரைப்படி அரிசி விற்கிறது.
ழைகள் வாங்கிச் சாப்பிட முடியாமல்
ண்டாடுகின்றனர். நெல்லும் தண்ணீர்
ரியாய் இல்லாத காரணத்தால் சரியான
ளைச்சல் இல்லை. நெல் கதிராக இருக்
போதும், களத்திற்கு வந்த பிறகும்
நேக இடங்களில் திருட்டு நடந்து விட்
து. இந்தத் திருட்டுக்குக் காரணம்
றுமைதான்.

ரேஷனை ரத்து செய்ததால் விலைவாசி
ஷம் போல் ஏறிவிட்டது. இது உடனே
றைந்தாக வேண்டும். மிராஸ்தார்கள்
ணத்திற்கு ஆசைப்பட்டு அதிக விலைக்கு
ற்க வேண்டாம். நியாயமான விலைக்கே
காடுங்கள் என்று ஸ்ரீ வி. கே. பழனிசாமி
வுண்டர் பல இடங்களில் கூறுவதை
ராட்டுகிறோம். அவருடைய யோசனை
ய ஏற்று நியாய விலைக்கு கொடுக்காவிட்
ால், சர்க்காரே கொள்முதல் செய்து
வாரணக்கடைகள் மூலம் வினியோகிக்க
வண்டிய நிலைமை வரும் என்று நாமும்
ந்த தாலூக்கா மிராஸ்தார்களுக்கு எச்
ரிக்கிறோம்.

இப்போது உள்ள நிலைமையிலேயே
லைவாசிகள் போய்க் கொண்டிருந்தால்
ழை மக்கள் வாங்கிச் சாப்பிட முடியா
ல் பட்டினியால் மடிய நேரிடலாம்.

கிராமங்களில் கூலி வேலையும் கிடை
து. மக்கள் டவுனை நாடிவருகின்றனர்.
னிலும் வேலை கிடைபாது கிராமங்

களில் இப்போது நிவாரணக் கடைகள் இல்லை. இருப்பதிலும் தானியம் இல்லை. இதை உடனே கவனித்து அதிகாரிகள் நிவாரணக் கடைகளைத் திறந்தால் நலமாயிருக்கும். நியாய விலைக்குத் தான் விற்க வேண்டும். உள்ளதை கிராமங்களில் பகிர்ந்து கொள்ள வேண்டும். ஏழைகளுக்கு உதவி செய்யவேண்டும். விலை ஏற்றம் ஆபத்து என்பன போன்ற செய்திகளை, தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியாரும், எம். எல். ஏ. யும் மக்களிடையே பிரச்சாரம் செய்தால் நலமாயிருக்கும்.

—:○●○:—

பொள்ளாச்சியில் கள்ள நாணயங்கள்.

கோவையை அடுத்த சிங்கநல்லூரில் பார்வதி என்ற பெண் ஒரு ரூபாய் அரை ரூபாய் நாணயங்களை பல கடைகளில் மாற்றிக்கொண்டிருக்கும் போது போலீஸார் சந்தேகப்பட்டு கைது செய்து விசாரித்ததின் பேரில் பொள்ளாச்சி ஷண்முகபுரி வீதியில், ஒரு வீட்டை சோதனை போட்டு, கள்ள நாணயங்கள் அடித்த கருவிகளையும், அரை ரூபாய், ஒரு ரூபாய் நாணயங்கள் மொத்தம் ரூபாய் 70-ம் கைபற்றிக் கொண்டும், சம்மந்தப்பட்ட சங்கரன் என்கிற வைத்தியர் 1, கோபாலன் என்கிற சங்கரன் 2, பார்வதி அம்மாள், ஆகிய மூவரையும் கைதுசெய்து போலீஸார் வழக்கும் பதிவு செய்துள்ளனர்.

வரப்பெற்றோம்.

ம. பொ. சி. யின் போட்டோவை முகப்பில் தாங்கிய "முத்தமிழ்ச் சோலை" சிறந்த முறையில் உயர்ந்த கருத்துக்களுடன் கட்டுரைகளைத் தாங்கியிருப்பது. போற்றதற்குறியது. அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டுகிறோம். குறைந்த விலை அணா நாலு தான்.

விஜயா டைமண்ட்ஸ்.

ஒரிஜினல் ரங்கூன் கமலங்கள், திருச்சி கமலங்கள், நீலம். சிகப்புமுதலிய கற்களும், சீமை அரம் வாள்தகடு முதலிய எல்லா

விதமான பட்டறை சாமான்களும் கிடைக்கும்.

R கிருஷ்ணன்.

ஷராப் வியாபாரம், எஸ். எம். ஜோசியர் தெரு, பொள்ளாச்சி.

காங்கிரஸ் என்றால் என்ன?
காங்கிரஸ்காரர்கள் யார்?
நவீன தேசபக்தர்கள் கிளம்பி
இருப்பதின் மர்மம் என்ன?
மக்கள் கடமை என்ன?

என்பன போன்ற ருசிகரமான விஷயங்களை பழம் பெரும் தேசபக்தர் ஸ்ரீ சி. என் நாகப்ப பிள்ளை — அடுத்த வாரம் முதல் தொடர்ச்சியாக, "**காங்கிரஸ்**" என்னும் தலைப்பில் எழுதுவார். எதிர்பாருங்கள்.

—○●○—

செய்திகள்.

16-2-51 ல் முனிசிபல் ஆபீஸில் நடைபெற்ற ஏல விபரம்.

பெரிய சந்தையை 99530-ரூபாய்க்கு கோட்டாம்பட்டி ஸ்ரீ அங்கண்ண கவுண்டரும், ஆடு வதை செய்யுமிடம் 7000-ரூபாய்க்கு ஸ்ரீ நாகப்ப நாயுடும் ஏலத்தில் எடுத்துள்ளனர்.

உங்கள் வியாபாரம் விருத்தி அடைய சரியான விளம்பரம் தேவையானால்! "பொள்ளாச்சி வாசி" யில் விளம்பரம் செய்யுங்கள்.

விளம்பர விகிதம்.

ஒரு பக்கம் தடவை 1-க்கு		ரூ.	40—0—0
அரைப்பக்கம்	,,	ரூ.	20—0—
கால் பக்கம்	,,	ரூ.	10—0—
ஒருகாலத்தில்ஒருஅங்குலம்	,,		2—0—0

நேர்த்தியான சாப்பாடும்!

சுவை மிக்க பிரயாணியும்!

சுகாதாரமுறைப்படி தயாரிக்கும்கடை:-

பட்கல் இஸ்லாமியா,

ஓட்டல் & டீ கிளப்,

P. A. மகமத்கோயா & பிரதர்

மார்கெட் ரோடு,

பொள்ளாச்சி.

நமது தபால் பெட்டி.

அன்புள்ள "பொள்ளாச்சி வாசி"
ஆசிரியர் அவர்கட்கு வந்தனம்.

"பொள்ளாச்சி வாசி" முதல் இதழைக் கண்டோம், அடைந்தோம் மகிழ்ச்சி. ஏன்? வெகு நாட்களாக பொள்ளாச்சியில் ஒரு பத்திரிக்கை வெளியிடக்கூடியவர்கள் யாரும் இல்லை என இருந்தபொழுது என் மனம் மிக வேதனை அடைந்தது. ஆனால் அம்மனவேதனையைக் குறைக்க ஆகஸ்டு தியாகியும், ஆணவக்காரர்களை அறை கூவி அழைக்கும், அஞ்சா நெஞ்சருமான, தியாகி பி. எஸ். வேலுசாமியை ஆசிரியராகக் கொண்டு "பொள்ளாச்சி வாசி" வந்தது கண்டு உள்ளம் உவகை அடைகிறது. "பொள்ளாச்சி வாசி" வார இதழை பொள்ளாச்சி வாசிகள் மட்டுமின்றி கடல் கடந்த தமிழ் வாசிகளும், கண்டு களிப்படைய, தேசப்பிதாவையும், சுதந்திரத் தாயையும் தலைகுனிந்து வணங்குகிறோம்.

வாழ்க, "பொள்ளாச்சி வாசி".

ஜெய் ஹிந்த். நிர்வாகி,
ஜனமணி ஸ்டால், பொள்ளாச்சி.

ஆசிரியர் அவர்களுக்கு,

நம் முனிசிபல் கூட்டங்களுக்கு கவுன்சிலர்கள் சரிவரப் போவதில்லையாம். கோரம் இல்லாமல் பல தடவைகள் கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டிருக்கிறதாம். வாராத கவுன்சிலர்களின் பெயர்களை "பொள்ளாச்சி வாசி"யில் பிரசுரித்தால் வாக்காளர்கள் அவர்களை அணுகி கூட்டங்களுக்கு போகும்படி, தூண்ட ஏதுவாகும். எழுதுவீர்களா?

ஒரு வோட்டர்.

சர்வோதய முகாம்.

17, 18, 19-தேதிகளில் ஊத்துக்குளி ஜமீன் கனகச் சோலையில் தாலூக்கா காங்கிரஸ் கமிட்டியின் சார்பில் சர்வோதய முகாம் நடைபெற்றது. முகாமில் பெண்கள் உள்பட சுமார் 40-பேர்கள் கலந்து கொண்டனர். ஆரம்ப தினத்தன்று ஸ்ரீ என். மகாலிங்கம் கொடி யேற்று விழா செய்தார். முனிசிபல் சேர்மன் ஸ்ரீ சேதுராமசாமி முகாமைத் திறந்து வைத்து நிர்வாகத் திட்டம் என்பது பற்றிப் பேசினார் ஸ்ரீ ராமகிருஷ்ண மிஷன் வித்தியாலயம் திரு. க. அருணாசலம் பி. ஏ. எல். டி. [illegible]காமில் கலந்துகொண்டு சிறந்த முறை[illegible] போதனை நடத்தினர். ஸ்ரீ யு. கே. [illegible]ண்முகம் செட்டியாரும் ஏனைய நண்பர் [illegible]வந்திருந்தவர்களுக்கு உபசாரம்

பொள்ளாச்சி நகரசபைக் கூட்டம்.

19—2—51 ல் முனிசிபல் ஹாலில் சேர்மன் ஸ்ரீ பி. கே. சேதுராமசாமி தலைமையில் நகரசபைக் கூட்டம் நடைபெற்றது.

அஜர் அங்கத்தினர்கள்:—
ஸ்ரீ ஏ. ஜே. எஸ். மரியதாஸ்
,, பி. எஸ். வேலுசாமி
, எம். ராமசாமி கவுடர்
,, பி. கே தர்மலிங்கக் கவுண்டர்
,, பொன்னுமுத்துராமசாமிக் கவுண்டர்
,, ஆர். கிருஷ்ணசாமிக் கவுண்டர்
,, பி. பாலகிருஷ்ணமூர்த்தி செட்டியார்
,, எஸ். வரதாஜ்
,, கே. ராமலிங்கம்
,, ஏ. சி. எம். ஏ. மகம்மது உசேன் சாயபு

முனிசிபல் ஆண்கள் மத்தியதரப் பள்ளியில் மகாத்மாஜி, ராஜன்பாபு, நேரு இவர்களின் படம் வைக்க முடிவு செய்யப்பட்டது. ரோடுகளில் தார் வேலைக்கு 25-டன் தார் வாங்கியதற்கு ரூ. 7810-4-0 சாங்க்ஷன் செய்யப்பட்டது.

1	இமாம்கான் வீதி தார்வேலை எஸ்டிமேட்	ரூ. 1700-0-0
2	பெருமாள்செட்டி வீதி	,, 1050-0-0
3	பாலகோபாலபுரம் வீதி	,, 1800-0-0
4	பயாஸ்கோப் ரோடு	,, 3500-0-0
5	கடை வீதி	,, 1900-0-0
6	ரயில்வேஸ்டேஷன் வீதி	,, 1000-0-0
7	இமாம்கான் வீதி மெட்டல் வேலை	,, 1900-0-

ஷை வேலைகளை செய்யவந்திருந்த டெண்டர்களை அங்கீகரிக்கப்பட்டது. கூட்ஷெட் ரோடு ரிப்பேர் வேலைக்கு ரூ. 1000-0- எஸ்டிமேட் சாங்க்ஷன் செய்யப்பட்டது.

முனிசிபல் பெண் பள்ளிக்கூடத்தில் மாணவிகளுக்கு வீட்டு வேலை கற்றுக் கொடுக்க சாமான்கள் வாங்கி சப்ளை செய்ய முடிவு செய்யப்பட்டது.

1951-52 வருஷத்திற்கு எலக்ட்ரிசிட்டி டிபார்ட்மெண்டுக்குத் தேவையான எலக்ட்ரிக் சாமான்கள் வாங்க ரூ. 22331-0-0 சாங்க்ஷன் செய்யப்பட்டது. ஒவ்வொரு சிசுசம்ரக்ஷண சாலைக்கும் பேரீச்சம்பழம் இனமாக சப்ளை செய்யவும் முடிவு செய்யப்பட்டது. வார்டு 4, திருவேங்கட முதலியார் வீதியில் 3-விளக்கும், வார்டு 10 பழனியப்ப கவுண்டர் வீதியில் 2-விளக்கும் போடும்படி ஸ்ரீ பி. எஸ். வேலுசாமியின் தீர்மானம் நிறைவேறியது.

கவுன்சில் அங்கத்தினர்கள் எண்ணிக்கை கவுன்சிலின் ஸ்தானங்கள், ஒதுக்குவது வார்டுகளை திருத்தி யமைப்பது இவைகள் சம்மந்தமான பிரரேபணைகளை சிபார்சு செய்ய, ஸ்ரீமான்கள் பி. எஸ். வேலுசாமி, எஸ். வரதராஜ், கிருஷ்ணசாமிக் கவுண்டர் ஆகிய மூவர் அடங்கிய கமிட்டி நியமிக்கப்பட்டது. பிரிட்டிஷ் மன்னர் தம்பதிகளின் படங்களுக்கு பதிலாக, காந்திஜீ, குடி அரசுத்தலைவர் இவர்களின் படங்களை வைக்கும்படியான சர்க்கார் உத்திரவு ரிக்கார்டு செய்யப்பட்டது மற்றும் பல விஷயங்கள் முடிவு செய்யப்பட்டது. (ந. கி.)

உழுதுண்டு வாழ்வானே வாழ்வான்
மற்றெல்லாம் தொழுதுண்டு பின் செல்வர்.
(வள்ளுவர்.)

P. S. G.

● இந்தியரின் மூலதனம்.



● இந்தியரின் உழைப்பு.

P. S. G. எலெக்ட்ரிக் மோட்டார் பம்புகளின் முக்கிய அம்சங்கள்.
● குறைந்த சிலவில் அதிக தண்ணீர், ● நிகரற்ற சேவை,
● நீடித்த உழைப்பு, ● நிசப்தமான ஓட்டம்.

P. S. G. உற்பத்தி பொருள்களின் விநியோகஸ்தர்:—

C. N. சாமி என்ஜினியரிங் ஒர்க்ஸ்,
ராஜாமில் ரோடு, பொள்ளாச்சி.

குறிப்பு:— எல்லா விதமான எலெக்ட்ரிக் மோட்டார் பம்பு செட்டுகள், ஆயில் என்ஜின்கள், மோட்டார் ரீவைண்டிங்கள், குறித்த காலத்தில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

உரிமையாளர்:— C. நாராயணசாமி.

உலகப் பிரசித்தி பெற்ற பல்லடம்

உரிமையாளர்:

P A ரஹீம் சாயபு,

பல்லடம்.

ஏஜண்ட்:

A K யாகூப் சாயபு

பொள்ளாச்சி.

குயில் மார்க் பீடிகளையே வாங்கி

உபயோகியுங்கள்.

போன் 42. தந்தி: டிரேடிங் கோ.

எக்கோ ரேடியோக்கள்.

கோவை ஜில்லா வினியோகஸ்தர்கள்:

P. S. வைத்தியநாத்,

ரேடியோ எஞ்சினியர், பொள்ளாச்சி

&

P. S. வைத்திய நாத் & கோ.

ரேடியோ சேல்ஸ் & சர்வீஸ்,

8-59 ஜெயில் ரோடு, கோயமுத்தூர்.

குறிப்பு:— எல்லாவிதமான ரேடியோக்களும் குறைந்த சார்ஜில் ரிப்பேர் செய்து கொடுக்கப்படும்.

போன் நெம்பர். 63.

Edited & Published by P. S. Veluswamy, Printed at the Sri Devi Press, Rajamill Road, Pollachi.